# ஏற்காடு கரோனா சிகிச்சை மையத்துக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

**ஏற்காடு, ஜூன் 8:** சேலம் மாவட்டம், ஏற்காட்டில் உள்ள கரோனா சிகிச்சை மையத்துக்கு பல்வேறு நிறுவனங்கள் சார்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஏற்காடு மற்றும் 67 மலைக் கிராமங்களிலிருந்து 53 கரோனா தொற்றாளர்கள் இந்த மையத்தில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இந்த மையத்துக்கு சேலம் எஸ்.கே.எஸ் மருத்துவமனை சார்பில் 62 கே.வி ஜெனரேட்டர், 10 ஆக்சிஜன் சிலிண்டர்களும், சென்னை பூமிகா டிரஸ்ட் ஜெயந்திரா நிறுவனமும் சார்பில் 15 ஆக்சிஜன் சிலிண்டர்களும், 50 படுக்கைகளும், 5 ஆக்சிஜன் உற்பத்தி உபகரணங்களும் வழங்கப்பட்டன. ஏற்காடு ஒயில்ஆர்கிட் நிறுவனம் சார்பில் 50 படுக்கைகளும், தேசிய டிரஸ்ட் சார்பில் மருத்துவப் பொருள்களும் வழங்கப்பட்டன. இம்மையத்தில் ரெட்ரீட் இல்லம் அருட்தந்தை ராஜ், ஏற்காடு இளைஞர்கள் அமைப்பு, வட்டார சுகாதார மைய மருத்துவக் குழுக்கள் பல்வேறு உதவிகளையும், கண்காணிப்பு பணிகளையும் மேற்கொண்டுள்ளன.

வட்டாட்சியர் தலைமையில் 67 கிராமங்களில் 53 குழுக்கள், கிராம உதவியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் வீடுகள்தோறும் உடல் நலம் குறித்த விவரங்களை சேகரித்து வருகின்றனர்.



ஏற்காடு ஒயில்ஆர்கிட் நிறுவனம் சார்பில் 50 படுக்கைகளும், தேசிய டிரஸ்ட் சார்பில் வழங்கப்பட்ட மருத்துவப் பொருள்களும்.